# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

(2002 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, திசெம்பர் மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 6.25 | தபாற் செலவு : ரூபா 4.50

# 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ. 60/2002
4713

**பெற்றோலியத்தின் இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் அத்துடன் விநியோகம் என்பவற்றிற்கான மாற்று நடவடிக்கை முறையொன்றுக்கு ஏற்பாடு செய்வதற்கும்; சக்தி வழங்கல் குழுவுக்குக் குறித்தசில தத்துவங்களை உரித்தாக்குவதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

குறுக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இச்சட்டம், 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய திகதியன்று (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தத்துவங்கள் பங்கப்படாமலிருத்தல்.

2. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களுக்குப் பங்கமின்றியும் அத்துடன் அவற்றிற்கு மேலதிகமாகவும் தொழிற்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் சக்தி வழங்கல் குழுவுக்குத் தத்துவங்கள் அளிக்கப்படுதல்.

3. சக்தி வழங்கல் குழு, இச்சட்டம் தொடர்பில் இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படும் தத்துவங்களைப் பிரயோகித்தலும், கடமைகளை நிறைவேற்றுதலும் மற்றும் பணிகளைப் புரிதலும் வேண்டும்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் சில ஏற்பாடுகள் சக்தி வழங்கல் குழுவுக்கு ஏற்புடையன வாதலாகாது.

4. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 5ஒ என்னும் பிரிவின் ஏற்பாடுகளில் உள்ளடங்கியுள்ள ஏதேனும் விடயம் எப்படியிருப்பினும்சரி, அச்சட்டத்தின் 5ஆ, 5இ, 5உ, 5ஊ, 5எ, 5ஐ மற்றும் 5ஒ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் பின்வரும் ஏற்பாடுகளினால் சக்தி வழங்கல் குழுவிற்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள் தொடர்பில் ஏற்புடையனவாதல்

பெற்றோலியத்தை இறக்குமதி, ஏற்றுமதிசெய்தல் போன்றவற்றிற்கு உரிமம் வழங்குதல்.

5. (1) அமைச்சரானவர், சக்தி வழங்கல் குழுவின் விதப்புரையின்மீது, பெற்றோலியத் துறையினது தேவைப்பாடுகளையும் தேசிய பொருளாதாரத்தின் நலன்களையும் கருத்திற்கொண்டு, பெற்றோலியத்தை, இறக்குமதிசெய்ய, ஏற்றுமதி செய்ய, விற்பனைசெய்ய, வழங்க அல்லது விநியோகம்செய்ய எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுமத்துக்கு உரிமமொன்றை வழங்கலாம்.

(2) முதலாம் உட்பிரிவின் நியதிகளுக்கிணங்க உரிமமொன்றை வழங்குவதானது, பெற்றோலியத்தை இறக்குமதி செய்வது, ஏற்றுமதி செய்வது, விற்பனைசெய்வது, வழங்குவது மற்றும் விநியோகிப்பது என்பன உரியமுறையில் ஒழுங்குபடுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக சக்தி வழங்கல் குழுவின் ஆலோசனைமீது அமைச்சரால் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவான தாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நியதிகளுக்கிணங்க வழங்கப்படும் உரிமங்களின் மொத்த எண்ணிக்கையானது, ஆரம்பத்தில் மூன்றை விஞ்சுதலாகாது :

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதானது தேசிய பொருளாதார நலன் சார்ந்ததும் மற்றும் நுகர்வோரின் தேவையுமாகும் எனச் சக்தி வழங்கல் குழுவுக்குத் தோன்றுமிடத்து, அத்துறையின் நலனைக் கருத்திற்கொண்டு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கைக்கு மேலதிக உரிமங்கள் வழங்கப்படுதல் வேண்டும் என அமைச்சருக்கு விதப்புரை செய்யலாம். அமைச்சரானவர் தொடர்புடைய எல்லாச் சூழ் நிலைகளையும் கவனத்திற்கொண்டு வழங்கப்படவேண்டிய உரிமங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம்.

(4) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது உரிமம்பெற்ற ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய கூட்டுத்தாபனத்துக்கு ஏற்புடைத்தாகக் கூடியவாறு, அதற்கிணங்க வாசித்துப் பொருள்கொள்ளப் படுதலும் வேண்டும்.

பெற்றோலியத்தின் விநியோகத் துக்கான உரிமமொன்றை வழங்குதல்.

**6.** (1) ஐந்தாம் பிரிவின் நியதிகளுக்கிணங்க பெற்றோலிய விநியோகத்துக்கான உரிமமொன்றை வழங்கும்போது, வலு மற்றும் சக்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், அத்தகைய விநியோகத்துக்காகப் பயன்படுத்தப்படும் வளவுகளின் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான ஒப்பேறுதன்மையை நிச்சயிப்பதன்பொருட்டு பொருளாதாரச் சீர்திருத்தங்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(2) விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கையானது, காலத்துக்குக் காலம் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளாதல் வேண்டும். விதித்துரைக் கப்பட்ட நடவடிக்கைகளை ஆளும் விசேட நிபந்தனைகளும் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நியதிகளுக்கிணங்கப் பெற்றோலிய விநியோகத்துக்காக வழங்கப்பட்ட உரிமமானது, விநியோகத்துக் கான உரிமமொன்றுக்கு ஏற்புடையதான வேறு நிபந்தனை களுக்கு மேலதிகமாக விநியோகம் மற்றும் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய வேறு நடவடிக்கை என்பவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகளை ஆளும் விசேட விதிகளையும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

(4) விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கையானது, நிர்மாணம், திட்டமிடல் மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்கக் கொண்டுநடாத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**7.** (1) அமைச்சரானவர் இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் கொண்டுநடாத்துவதற்காகவும் மற்றும் அவற்றுக்குப் பயன் அளிப்பதற்காகவுமான நோக்கத்துக்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியில் அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) முதலாம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் அங்கீகாரத்துக்காக வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்துக்கு முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட கருமமெதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட அத்தகைய திகதியிலிருந்து இல்லாதொழிந்த தாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எத்திகதியில் ஒழுங்குவிதியொன்று இல்லாதொழிந்ததாகக் கருதப்படுகின்றதோ அத்திகதி பற்றிய அறிவித்தலானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

8. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

9. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப் படுத்தினாலன்றி —

"இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்" என்பது, 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்று பொருள்படும் ;

"சக்தி வழங்கல் குழு" என்பது 2002 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சக்தி வலு வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதி களின்படி தாபிக்கப்பட்ட சக்தி வலு வழங்கல் குழு என்று பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.